TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075294

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறை விதி 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : Coimbatore  P.S. காவல்நிலையம் : Vigilance and Anti Corruption  Year ஆண்டு : 2021  FIR No முதல் தகவல் அறிக்கை எண் : 01/2021/AC/CB  Date நாள் : 06.01.2021

2. (i) Act சட்டம் : Prevention of Corruption Act 1988 amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.  Sections பிரிவுகள் : 7(a), 7(a) r/w 12 of PC Act.
(ii) Act சட்டம் :  Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் : Criminal Procedure Code.  Sections பிரிவுகள் : 102 Cr.P.C.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 05.01.2021  Date to நாள் வரை : 06.01.2021
Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : 1830 hrs  Time to நேரம் வரை : 04.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.01.2021  Time நேரம் : 12.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.01.2021  Time நேரம் : 12.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RTO Checkpost (Incoming) K.G. Chavadi Check post, Coimbatore. about 25 Km South west.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. JAYAVEL  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் D. Uchiyappan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2021  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Cell Inspector  (g) Address : முகவரி District Inspection cell office, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. N. Ramalingam, motor vehicle inspector (Non technical) K.G. Chavadi Check Post (Incoming) Coimbatore. 2) Tr. P. Seenivasan, Assistant, K.G. Chavadi Check Post (Incoming) Coimbatore. 3) Tmt. S. Padma, office Assistant K.G. Chavadi Check Post (Incoming) Coimbatore 4) M. Gopalakrishnan S/o Manickam D.No. 1, Maruthi Garden, Periyar nagar, Vadavalli, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் P. Panmaladevi
Rank: நிலை Inspector of Police No. எண்
VSAC, Coimbatore.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.01.2021 - 1400 hrs

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**Contents of the FIR in Coimbatore V&AC Cr.No.01/2021/AC/CB u/s. 7(a), 7(a) r/w 12 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC.**

இன்று 06.01.2021-ம் தேதி 12.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.U.ஜெயவேல், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2021/AC/CB u/s.7(a), 7(a) r/w 12 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC. ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு: அனுப்புநர் திரு.U.ஜெயவேல், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண் 11/2021/ஐ1, நாள். 06.01.2021 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - போக்குவரத்து துறை கந்தேகவுண்டன் சாவடி (உள்வருகை) சோதனைச் சாவடி - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோவை மாவட்டம், கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துத்துறை (உள்வருகை), சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள், கேரள மாநிலத்திலிருந்து சோதனைச் சாவடியை கடந்து தமிழ்நாட்டிற்குள் வரக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்தல், தற்காலிக உரிமம் (Temporary Permit) வழங்குதல், E-Way Bill, Tax Invoice மற்றும் Trip Sheet ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம் போக்குவரத்துத்துறை கந்தேகவுண்டன் சாவடி, சோதனைச் சாவடி (உள்வருகை) அலுவலகத்தினை 05.01.2021-ம் தேதி மாலை சுமார் 18.30 மணியளவில் நானும்

கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் இணைந்து திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. மேற்படி போக்குவரத்துத்துறை, சோதனைச் சாவடி (உள்வருகை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில் நுட்பம் அல்லாத) திரு.N.ராமலிங்கம் என்பவரும் உதவியாளராக P.சீனிவாசன் என்பவரும் அலுவலக உதவியாளராக திருமதி.S.பத்மா என்பவரும் 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் பணியில் இருந்தார்கள். அவர்களிடம் நானும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரத்தை தெரிவித்தும் தங்களை சுயபரிசோதனை செய்து எங்களிடம் பணம் ஏதும் இல்லை என்று வெளிப்படுத்திக் கொண்டு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனை சாவடி அலுவலக முன்புறத்தில் கவுண்டரிலிருந்து சீல் வைத்துவிட்டு திரும்பி செல்லும் 3 நபர்களிடமும் மற்றும் கவுண்டரை நோக்கி வந்த 2 நபர்களிடமும் மற்றும் சோதனைச்சாவடியின் நுழைவுவாயிலில் நின்று கொண்டிருந்த ஒரு நபரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் அவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி நபர்களை போக்குவரத்து துறை சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்து வந்து அவர்களை சமூக இடைவெளியை கடைபிடித்து அமரவைக்கப்பட்டது. மேற்படி சோதனை சாவடியில் தணிக்கையின் போது தெற்கு பார்த்த இருக்கையில் N.ராமலிங்கம் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில் நுட்பமல்லாத) அமர்ந்திருந்தார். மேற்படி E-way bill, Invoice Bill மற்றும் Trip sheet-ல் சீல் வைக்கும் கவுண்டரில் தெற்கு பார்த்த இருக்கையில் டேபிளின் முன்பு அலுவலக உதவியாளர் S.பத்மா அமர்ந்திருந்தார். அவரது பக்கத்து இருக்கையில் உதவியாளர் P.சீனிவாசன் அமர்ந்திருந்தார். மேற்படி அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவர் அமர்ந்திருந்த சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளை சோதனை செய்ததில் அந்த டேபிளின் மேல் வைக்கப்பட்டிருந்த செய்தித்தாள்களுக்குள் ரூபாய் நோட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.7,880/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திருமதி.பத்மா, அலுவலக உதவியாளர் என்பவரிடம் கேட்க சோதனைச்சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுக்கும் பணம் என்று சொன்னார். மேற்படி

பணமானது 05.01.2021-ம் தேதி மதியம் 2 மணி முதல் நாங்கள் திடீர் தணிக்கைக்கு வருவதற்கு முன்பு வரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட மாமூல் பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.7,880/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரிடம் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தானாக முன்வந்து 05.01.2021-ம் தேதி காலை 8.00 மணி முதல் மதியம் 02.00 மணிவரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுத்த பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். அதுபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களை விசாரிக்க அவர் 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் தான் பணிக்கு வந்ததிலிருந்து மதியம் 02.00 மணிவரை சோதனைச்சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் மாமூலாக வசூலித்த பணத்தை தான் தனது அலுவலகத்தில் தினக்கூலியாக வேலை செய்யும் கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்து அப்பணத்தை பதிவறையில் உள்ள இரும்பு பீரோவில் வைக்க சொன்னதின் பேரில் அவர் இரும்பு பீரோவில் வைத்துள்ள விபரத்தை தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளரிடம் மேற்படி கோபாலகிருஷ்ணன் என்பவரை அடையாளம் காட்ட சொன்னதன் பேரில் அவர் இவ்வலுவலகத்தில் இருந்த 6 நபர்களில் சோதனைசாவடியின் நுழைவுவாயிலில் நின்று கொண்டிருந்தவரான வெள்ளை சட்டை அணிந்திருந்த நபரை அடையாளம் காண்பித்தார். மேற்படி நபரை விசாரிக்க அவரது பெயர் கோபாலகிருஷ்ணன் என்றும், தான் மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2008-ம் தேதி பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், கடந்த 3 வருடங்களாக கந்தேகவுண்டன்சாவடி (உள்வருகை) சோதனைச்சாவடியில் தினக்கூலியாக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக பணிபுரிந்து வருவதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களது உத்தரவுப்படி அலுவலகத்தில் உள்ள ரொக்க பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்வது, பறக்கும்படை அதிகாரிகள் வாகனங்களை தணிக்கை செய்து கண்டுபிடிக்கும் குறைபாடுகள் சம்பந்தமான சோதனை அறிக்கைகள் அடங்கிய தபால்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பது போன்ற பணிகளை செய்து வருவதாகவும், தான் வேலை செய்யும் நாட்களில் பணி முடித்து செல்லும் போது

அன்றைய தினம் வசூல் செய்யப்பட்ட மாமூல் பணத்தில் இருந்து பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் தனக்கு ரூ.1000/- சம்பளமாக தருவார் எனவும் தெரிவித்தார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் திரு.கோபாலகிருஷ்ணன் ஆகியோரை திடீர் தணிக்கை குழுவினர் மேற்படி பதிவறைக்கு அழைத்து சென்று அந்த அறையில் வடக்கு பார்த்து இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்த போது பீரோவின் மேல்ரேக்கின் இடது பக்கத்திலிருந்து ரூ.29,000/-ஐ திரு.கோபாலகிருஷ்ணன் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.29,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி இரும்பு பீரோவை சோதனை செய்ததில் மேல்ரேக்கின் வலது பக்கத்திலிருந்து ரூ.6,200/-ம், அதன் நடுரேக்கில் ஆவணங்களுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரூ.8,000/-மும் மொத்தம் பணம் ரூ.14,200/- காணப்பட்டது. அதுபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் என்பவரிடம் விசாரிக்க அந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் சொல்லவில்லை. மேலும், உதவியாளர் திரு.சீனிவாசன் மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோர்களிடம் மேற்படி பணம் ரூ.14,200/- பற்றி விசாரிக்க அவர்களும் அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அன்றையதினத்தில் வாகன ஓட்டுநர் மற்றும் கிளினர்களிடமிருந்து சீல் வைப்பதற்காக வசூல் செய்யப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக அப்பணம் ரூ.14,200/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து உதவியாளர் திரு.சீனிவாசன் என்பவரிடம் வாகன தற்காலிக பர்மிட் மற்றும் வாகன வரி விதித்த வகையில் பெறப்பட்ட பணம் பற்றி விசாரித்த போது அவரது டேபிள் டிராயரில் இருந்த ரூ.49,660/-ஐ ஆஜர் செய்தார். அந்த தொகையை பற்றி அவரிடம் கேட்ட போது 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 07.55 மணி வரை வசூல் செய்யப்பட்ட அரசு கட்டணம் ரூ.48,705/- என்று தெரிவித்தார். மேற்படி வருவாய் வசூல் சம்பந்தமாக அலுவலக கணினி விபர பட்டியலுடன் (Accounts Statement) ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.48,705/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி டேபிள் டிராயரில் இருந்த ரூ.49,660/- பணத்தில் அரசு கட்டணம் தவிர கூடுதலாக இருந்த பணம் ரூ.955/- பற்றி கேட்ட போது அதற்கு அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அப்பணம் மாமூல் பணமாக இருக்கலாம் என கருதி ரூ.955/-

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் டேபிள் டிராயரில் இருந்த காக்கி நிற கவர் ஒன்றையும், தனியாக வைக்கப்பட்டிருந்த ரூ.270/- பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த காக்கி நிற கவரில் உள்ள பணத்தை எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.3,100/-ம் ஆக மொத்தம் ரூ.3,370/- இருந்தது. அது பற்றி விசாரிக்க மேற்படி பணம் ரூ.3,370/- காசநோய் வில்லைகள் விற்பனை செய்ததற்கான வசூல் செய்த தொகை என்று தெரிவித்து அதுசம்பந்தமாக திரு.க.குமரவேல், வட்டார போக்குவரத்து அலுவலர், கோவை (மேற்கு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.34160/A1/2020 நாள்:28.12.2020-ன்படி ரூ.10,000/- மதிப்பிலான வில்லைகள் பெறப்பட்டுள்ளதும், 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணிவரை ரூ.3,100/- மதிப்பிலான வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும், 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணியிலிருந்து திடீர் தணிக்கைக்கு வருவதற்கு முன்பு வரை ரூ.270/- மதிப்பிலான வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும், ரூ.6,630/- மதிப்பிலான காச நோய் வில்லைகள் மீதமிருப்பதும் சரிபார்க்கப்பட்டு மேற்படி தொகை ரூ.3,370/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரை விசாரிக்க 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் கேரள மாநிலத்திலிருந்து தமிழக எல்லைக்குள் கந்தேகவுண்டன் சாவடி (உள்வருகை) சோதனைச்சாவடி வழியாக வரும் வாகனங்களின் ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் E-Way Bill, Tax Invoice மற்றும் Trip Sheet - களில் சீல் வைப்பதற்கு மாமூலாக கொடுக்கும் பணத்தை பெற்று அதனை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்து விடுவதாகவும் தெரிவித்தார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 25%-ம், உதவியாளர் திரு.சீனிவாசன் அவர்களுக்கு 25%-ம், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களுக்கு 50%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் மற்றும் உதவியாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் விசாரிக்க அவர்களும் கிடைக்கும் மொத்த மாமூல் பணத்தை மேற்கண்டவாறு பிரித்துகொள்வோம் என தெரிவித்தனர். மேலும் திடீர் தணிக்கைக்கு வந்த சமயத்தில் மேற்படி சோதனை சாவடியில் சீல் வைத்து கொண்டு திரும்பி அவர்களது வாகனங்களை நோக்கி செல்ல முற்பட்ட (1) திரு.சாமிநாதன் வயது 31, த/பெ.சின்னத்துரை, கதவு எண்.36, வடக்கு வீதி, வைரங்குப்பம், கடலூர் மாவட்டம், (2) திரு.செந்தில்குமார் வயது 40, த/பெ.ராமசாமி, கதவு எண்.58, மாருதி நகர், நாமக்கல்

மாவட்டம் மற்றும் (3) திரு.கருப்புசாமி வயது 45, த/பெ.பெருமாள், கதவு எண்.65, 2வது மேற்கு பிரிவு, நுயமக்காடு, மூணாறு, கேரள மாநிலம் ஆகியோர்கள் தங்களது இன்வாயிஸ் பில்களில் சீல் வைப்பதற்காக மேற்படி சோதனை சாவடி கவுண்டரில் உள்ள அலுவலர்கள் முறையே ரூ.50/-, ரூ.100/- மற்றும் ரூ.200/-ஐ மாமூலாக கேட்டுப் பெற்றுக் கொண்டதாக தெரிவித்தார்கள். மேலும், மேற்படி சோதனை சாவடிக்கு சீல் வைக்க வந்த வாகன ஓட்டுநர்களான (1) திரு.காஜாமொய்தீன், வயது 34, த/பெ.காசீம், பழைய கதவு எண்.45/17, புதிய கதவு எண்.315, சேட் லைன், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் மற்றும் (2) திரு.சந்திரன், வயது 27, த/பெ.அய்யாதுரை, 1/58, புத்திராம்பட்டு மெயின்ரோடு, சங்கராபுரம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர்களை விசாரித்த போது தாங்கள் ஒவ்வொரு முறையும் கந்தேகவுண்டன்சாவடி (உள்வருகை) சோதனைச் சாவடியை கடந்து செல்லும் போது சோதனை சாவடியில் உள்ள போக்குவரத்து அலுவலர்களுக்கு இ-வே-பில்கள் மற்றும் இன்வாயிஸ் பில்களில் சீல் வைப்பதற்காக மாமூலாக பணம் ரூ.100/- கேட்பார்கள் என்றும் அவர்கள் கேட்கும் பணத்தை கொடுத்தால்தான் சீல் வைப்பார்கள் என்றும் அவ்வாறு அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்கவில்லை என்றால் வாகனத்தின் ஆவணங்களை வாங்கி வைத்து கொண்டு வாகனத்தை நிறுத்தி வைத்து, கேஸ் போடுவோம் என்று மிரட்டுவார்கள் என்றும் அதற்காகவே வேறு வழியில்லாமல் தாங்கள் வழக்கமாக அவர்கள் கேட்கும் மாமூல் பணத்தை கொடுத்து விட்டு சீல் பெற்று செல்வதாகவும் தெரிவித்தார்கள். மேற்படி ஐந்து நபர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுடைய வாகனங்களின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம், உதவியாளர் திரு.சீனிவாசன், அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா மற்றும் திரு.கோபாலகிருஷ்ணன் (தனிநபர்) ஆகியோரிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது பணம் ரூ.52,035/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இத்துடன் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள், மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.52,035/-, ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலங்கள் ஆகியவற்றை இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 06.01.2021, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு 2) கைப்பற்றப்பட்ட பணம் 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 1 முதல் 9 வரையிலானவை 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Madam, Received the complaint along with proceedings, Cash Rs.52,035/-, Documents, Statements on 06.01.2021 at 12.30hrs and registered a case in Coimbatore V&AC, 01/2021/AC/CB u/s. 7(a), 7(a) r/w 12 of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC. on 06.01.2021 at 13.00 hrs. (Sdxxxxx) P.Parimaladevi, 06.01.2021 Inspr, V&AC, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

06/01/2021

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ப.ஜெயவேல்,<br>ஆய்வுக்குழு ஆய்வாளர்,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,<br>கோயம்புத்தூர். |

<u>ந.க.எண். 11/2021/ஜ1, நாள். 06.01.2021</u>

அய்யா,

பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - போக்குவரத்து துறை கந்தேகவுண்டன் சாவடி (உள்வருகை) சோதனைச் சாவடி - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக

*********

கோவை மாவட்டம், கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துத்துறை (உள்வருகை), சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள், கேரள மாநிலத்திலிருந்து சோதனைச் சாவடியை கடந்து தமிழ்நாட்டிற்குள் வரக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்தல், தற்காலிக உரிமம் (Temporary Permit)

வழங்குதல், E-Way Bill, Tax Invoice மற்றும் Trip Sheet ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம் போக்குவரத்துத்துறை கந்தேகவுண்டன் சாவடி, சோதனைச் சாவடி (உள்வருகை) அலுவலகத்தினை 05.01.2021-ம் தேதி மாலை சுமார் 18.30 மணியளவில் நானும் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் இணைந்து திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. மேற்படி போக்குவரத்துத்துறை, சோதனைச் சாவடி (உள்வருகை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில் நுட்பம் அல்லாத) திரு.N.ராமலிங்கம் என்பவரும் உதவியாளராக P.சீனிவாசன் என்பவரும் அலுவலக உதவியாளராக திருமதி.S.பத்மா என்பவரும் 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் பணியில் இருந்தார்கள். அவர்களிடம் நானும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்

திருமதி.P.பரிமளாதேவி மற்றும் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரத்தை தெரிவித்தும் தங்களை சுயபரிசோதனை செய்து எங்களிடம் பணம் ஏதும் இல்லை என்று வெளிப்படுத்திக் கொண்டு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனை சாவடி அலுவலக முன்புறத்தில் கவுண்டரிலிருந்து சீல் வைத்துவிட்டு திரும்பி செல்லும் 3 நபர்களிடமும் மற்றும் கவுண்டரை நோக்கி வந்த 2 நபர்களிடமும் மற்றும் சோதனைச்சாவடியின் நுழைவுவாயிலில் நின்று கொண்டிருந்த ஒரு நபரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் அவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி நபர்களை போக்குவரத்து துறை சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்து வந்து அவர்களை சமூக இடைவெளியை கடைபிடித்து அமரவைக்கப்பட்டது. மேற்படி சோதனை சாவடியில் தணிக்கையின் போது தெற்கு பார்த்த இருக்கையில் N.ராமலிங்கம் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில் நுட்பமல்லாத) அமர்ந்திருந்தார். மேற்படி E-way bill, Invoice Bill மற்றும் Trip sheet-ல் சீல் வைக்கும் கவுண்டரில் தெற்கு பார்த்த இருக்கையில் டேபிளின் முன்பு அலுவலக உதவியாளர் S.பத்மா அமர்ந்திருந்தார். அவரது பக்கத்து இருக்கையில் உதவியாளர் P.சீனிவாசன் அமர்ந்திருந்தார். மேற்படி அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவர் அமர்ந்திருந்த சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளை சோதனை செய்ததில் அந்த டேபிளின் மேல் வைக்கப்பட்டிருந்த செய்தித்தாள்களுக்குள் ரூபாய் நோட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.7,880/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திருமதி.பத்மா, அலுவலக உதவியாளர் என்பவரிடம் கேட்க சோதனைச்சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுக்கும் பணம் என்று சொன்னார். மேற்படி பணமானது 05.01.2021-ம் தேதி மதியம் 2 மணி முதல் தாங்கள் திடீர் தணிக்கைக்கு வருவதற்கு முன்பு வரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட மாமூல் பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.7,880/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரிடம் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தானாக முன்வந்து 05.01.2021-ம் தேதி காலை 8.00 மணி முதல் மதியம் 02.00 மணிவரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுத்த பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். அதுபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களை விசாரிக்க அவர் 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் தான் பணிக்கு

வந்ததிலிருந்து மதியம் 02.00 மணிவரை சோதனைச்சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் மாமூலாக வசூலித்த பணத்தை தான் தனது அலுவலகத்தில் தினக்கூலியாக வேலை செய்யும் கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்து அப்பணத்தை பதிவறையில் உள்ள இரும்பு பீரோவில் வைக்க சொன்னதின் பேரில் அவர் இரும்பு பீரோவில் வைத்துள்ள விபரத்தை தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளரிடம் மேற்படி கோபாலகிருஷ்ணன் என்பவரை அடையாளம் காட்ட சொன்னதன் பேரில் அவர் இவ்வலுவலகத்தில் இருந்த 6 நபர்களில் சோதனைசாவடியின் நுழைவுவாயிலில் நின்று கொண்டிருந்தவரான வெள்ளை சட்டை அணிந்திருந்த நபரை அடையாளம் காண்பித்தார். மேற்படி நபரை விசாரிக்க அவரது பெயர் கோபாலகிருஷ்ணன் என்றும், தான் மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2008-ம் தேதி பணியிலிருந்து ஒய்வு பெற்றதாகவும். கடந்த 3 வருடங்களாக கந்தேகவுண்டன்சாவடி (உள்வருகை) சோதனைச்சாவடியில் தினக்கூலியாக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக பணிபுரிந்து வருவதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களது உத்தரவுப்படி அலுவலகத்தில் உள்ள ரொக்க பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்வது, பறக்கும்படை அதிகாரிகள் வாகனங்களை தணிக்கை செய்து கண்டுபிடிக்கும் குறைபாடுகள் சம்பந்தமான சோதனை அறிக்கைகள் அடங்கிய தபால்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பது போன்ற பணிகளை செய்து வருவதாகவும், தான் வேலை செய்யும் நாட்களில் பணி முடித்து செல்லும் போது அன்றைய தினம் வசூல் செய்யப்பட்ட மாமூல் பணத்தில் இருந்து பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் தனக்கு ரூ.1000/- சம்பளமாக தருவார் எனவும் தெரிவித்தார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் திரு.கோபாலகிருஷ்ணன் ஆகியோரை திடீர் தணிக்கை குழுவினர் மேற்படி பதிவறைக்கு அழைத்து சென்று அந்த அறையில் வடக்கு பார்த்து இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்த போது பீரோவின் மேல்ரேக்கின் இடது பக்கத்திலிருந்து ரூ.29,000/-ஐ திரு.கோபாலகிருஷ்ணன் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.29,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி இரும்பு பீரோவை சோதனை செய்ததில் மேல்ரேக்கின் வலது பக்கத்திலிருந்து ரூ.6,200/-ம், அதன் நடுரேக்கில் ஆவணங்களுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரூ.8,000/-மும் மொத்தம் பணம் ரூ.14,200/- காணப்பட்டது. அதுபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் என்பவரிடம் விசாரிக்க அந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் சொல்லவில்லை. மேலும், உதவியாளர் திரு.சீனிவாசன் மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோர்களிடம் மேற்படி பணம் ரூ.14,200/- பற்றி விசாரிக்க

அவர்களும் அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அன்றையதினத்தில் வாகன ஓட்டுநர் மற்றும் கிளினர்களிடமிருந்து சீல் வைப்பதற்காக வசூல் செய்யப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக அப்பணம் ரூ.14,200/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து உதவியாளர் திரு.சீனிவாசன் என்பவரிடம் வாகன தற்காலிக பர்மிட் மற்றும் வாகன வரி விதித்த வகையில் பெறப்பட்ட பணம் பற்றி விசாரித்த போது அவரது டேபிள் டிராயரில் இருந்த ரூ.49,660/-ஐ ஆஜர் செய்தார். அந்த தொகையை பற்றி அவரிடம் கேட்ட போது 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 07.55 மணி வரை வசூல் செய்யப்பட்ட அரசு கட்டணம் ரூ.48,705/- என்று தெரிவித்தார். மேற்படி வருவாய் வசூல் சம்பந்தமாக அலுவலக கணினி விபர பட்டியலுடன் (Accounts Statement) ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.48,705/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி டேபிள் டிராயரில் இருந்த ரூ.49,660/- பணத்தில் அரசு கட்டணம் தவிர கூடுதலாக இருந்த பணம் ரூ.955/- பற்றி கேட்ட போது அதற்கு அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அப்பணம் மாமூல் பணமாக இருக்கலாம் என கருதி ரூ.955/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் டேபிள் டிராயரில் இருந்த காக்கி நிற கவர் ஒன்றையும், தனியாக வைக்கப்பட்டிருந்த ரூ.270/- பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த காக்கி நிற கவரில் உள்ள பணத்தை எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.3,100/-ம் ஆக மொத்தம் ரூ.3,370/- இருந்தது. அது பற்றி விசாரிக்க மேற்படி பணம் ரூ.3,370/- காசநோய் வில்லைகள் விற்பனை செய்ததற்கான வசூல் செய்த தொகை என்று தெரிவித்து அதுசம்பந்தமாக திரு.க.குமரவேல், வட்டார போக்குவரத்து அலுவலர், கோவை (மேற்கு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.34160/A1/2020 நாள்:28.12.2020-ன்படி ரூ.10,000/- மதிப்பிலான வில்லைகள் பெறப்பட்டுள்ளதும், 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணிவரை ரூ.3,100/- மதிப்பிலான வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும், 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணியிலிருந்து திடீர் தணிக்கைக்கு வருவதற்கு முன்பு வரை ரூ.270/- மதிப்பிலான வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும், ரூ.6,630/- மதிப்பிலான காச நோய் வில்லைகள் மீதமிருப்பதும் சரிபார்க்கப்பட்டு மேற்படி தொகை ரூ.3,370/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரை விசாரிக்க 05.01.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் கேரள மாநிலத்திலிருந்து தமிழக எல்லைக்குள் கந்தேகவுண்டன் சாவடி (உள்வருகை) சோதனைச்சாவடி வழியாக வரும் வாகனங்களின்

ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் E-Way Bill, Tax Invoice மற்றும் Trip Sheet - களில் சீல் வைப்பதற்கு மாமூலாக கொடுக்கும் பணத்தை பெற்று அதனை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்து விடுவதாகவும் தெரிவித்தார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 25%-ம், உதவியாளர் திரு.சீனிவாசன் அவர்களுக்கு 25%-ம், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களுக்கு 50%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம் மற்றும் உதவியாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் விசாரிக்க அவர்களும் கிடைக்கும் மொத்த மாமூல் பணத்தை மேற்கண்டவாறு பிரித்துகொள்வோம் என தெரிவித்தனர். மேலும் திடீர் தணிக்கைக்கு வந்த சமயத்தில் மேற்படி சோதனை சாவடியில் சீல் வைத்து கொண்டு திரும்பி அவர்களது வாகனங்களை நோக்கி செல்ல முற்பட்ட (1) திரு.சாமிநாதன் வயது 31, த/பெ.சின்னத்துரை, கதவு எண்.36, வடக்கு வீதி, வைரங்குப்பம், கடலூர் மாவட்டம், (2) திரு.செந்தில்குமார் வயது 40, த/பெ.ராமசாமி, கதவு எண்.58, மாருதி நகர், நாமக்கல் மாவட்டம் மற்றும் (3) திரு.கருப்புசாமி வயது 45, த/பெ.பெருமாள், கதவு எண்.65, 2வது மேற்கு பிரிவு, நயமக்காடு, மூணாறு, கேரள மாநிலம் ஆகியோர்கள் தங்களது இன்வாயிஸ் பில்களில் சீல் வைப்பதற்காக மேற்படி சோதனை சாவடி கவுண்டரில் உள்ள அலுவலர்கள் முறையே ரூ.50/-, ரூ.100/- மற்றும் ரூ.200/-ஐ மாமூலாக கேட்டுப் பெற்றுக் கொண்டதாக தெரிவித்தார்கள். மேலும், மேற்படி சோதனை சாவடிக்கு சீல் வைக்க வந்த வாகன ஓட்டுநர்களான (1)திரு.காஜாமொய்தீன், வயது 34, த/பெ.காசீம், பழைய கதவு எண்.45/17, புதிய கதவு எண்.315, சேட் லைன், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் மற்றும் (2) திரு.சந்திரன், வயது 27, த/பெ.அய்யாதுரை, 1/58, புத்திராம்பட்டு மெயின்ரோடு, சங்கராபுரம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர்களை விசாரித்த போது தாங்கள் ஒவ்வொரு முறையும் கந்தேகவுண்டன்சாவடி (உள்வருகை) சோதனைச் சாவடியை கடந்து செல்லும் போது சோதனை சாவடியில் உள்ள போக்குவரத்து அலுவலர்களுக்கு இ-வே-பில்கள் மற்றும் இன்வாயிஸ் பில்களில் சீல் வைப்பதற்காக மாமூலாக பணம் ரூ.100/- கேட்பார்கள் என்றும் அவர்கள் கேட்கும் பணத்தை கொடுத்தால்தான் சீல் வைப்பார்கள் என்றும் அவ்வாறு அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்கவில்லை என்றால் வாகனத்தின் ஆவணங்களை வாங்கி வைத்து கொண்டு வாகனத்தை நிறுத்தி வைத்து, கேஸ் போடுவோம் என்று மிரட்டுவார்கள் என்றும் அதற்காகவே வேறு வழியில்லாமல் தாங்கள் வழக்கமாக அவர்கள் கேட்கும் மாமூல் பணத்தை கொடுத்து விட்டு சீல் பெற்று செல்வதாகவும் தெரிவித்தார்கள். மேற்படி ஐந்து

நபர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுடைய வாகனங்களின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராமலிங்கம், உதவியாளர் திரு. சீனிவாசன், அலுவலக உதவியாளர் திருமதி. பத்மா மற்றும் திரு.கோபாலகிருஷ்ணன் (தனிநபர்) ஆகியோரிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது பணம் ரூ.52,035/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இத்துடன் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள், மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.52,035/- ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலங்கள் ஆகியவற்றை இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆய்வுக்குழு ஆய்வாளர்,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்
கோயம்புத்தூர்.

இணைப்பு:

1) நடவடிக்கை குறிப்பு
2) கைப்பற்றப்பட்ட பணம்
3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 1 முதல் 9 வரையிலானவை
4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள்

Madam,

Received the complaint along with proceedings, Cash Rs.52,035/-, documents, statements on 06.01.2021 at 12.20 hrs and registered a case in V&AC Cr.No. 01/2021/[illegible] CB u/s 7(a), 7(c) r/w 12 of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and [illegible] on 06.01.2021 at 13.00 hrs.

[illegible]
06/01/2021
[illegible] Coimbatore